**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 66/2021**

Deposition of Witness for Prosecution

Defence PW : 1

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tmt. Rani

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 4th day of November, 2022.

**Date : 04.11.2022, S.C.No. 66/2021 PW : 1, Tmt. Rani**

**முதல் விசாரணை...**

நான் திருநின்றவூரில் குடியிருந்து வருகிறேன். எஸ்.ஆர். அன்னம் ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை வைத்திருக்கிறேன். மகேந்திரன் என்பரை எனக்கு தெரியும். அவர் எங்களுடன் நட்புடன் பழகுவார். எங்கள் கடைக்கு அவர் அடிக்கடி வருவார். அவர் டிராவல்ஸ் வைத்திருக்கிறார். நாங்கள் வெளியே சென்றால் அவரது டிராவல்ஸ்-ல் தான் செல்வோம். மகேந்திரன் என்பவருக்கும் தமிழ் என்பவருக்கும் பிரச்சனை இருந்திருக்கிறது. அது எனக்கு முதலில் தெரியாது. மகேந்திரன் எங்கள் கடைக்கு சுமார் 2 வருடத்திற்கு முன்னர் பால் மற்றும் தண்ணீர் வாங்க வந்தார். என் கடை செல்வராஜ் நகரில் இருக்கிறது. மாலை 6.00 மணிக்குமேல் அவர் கடைக்கு வந்தார். அவர் தண்ணீர் கேனை எடுத்துசென்றார். பாலை வைத்துவிட்டு சென்றுவிட்டார். பாலை வைத்துவிட்டு சென்றுவிட்டானே என்று நான் வெளியே வந்தேன். மகேந்திரன் எங்கள் தெருவில் எங்களை நோக்கி காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று ஓடி வந்தார். நான் கடைக்குள் மகேந்திரன் போக சொல்லி ஷட்டரை மூடினேன். 4, 5 பேர் வந்து என்னை தள்ளிவிட்டு மகேந்திரனை வெட்டிவிட்டு சென்றார்கள். ஆஜர் 1 முதல் 4 எதிரிகளில் 1ம் எதிரியான தமிழ்செல்வனை மட்டும் தெரியும். சாட்சி 1ம் எதிரியை அடையாளம் காட்டுகிறார். மற்றவர்களை எனக்கு தெரியுது. எனக்கு ஒரு கண் மட்டுமே தெரியும். ஆகவே மாலை 6.00 மணிக்குமேல் நான் பொதுவாக கடைக்கு செல்ல மாட்டேன். தமிழ்செல்வன் கத்தி வைத்திருந்தார்.

நான் காப்பாற்றுங்கள் என்று கூறினேன். யாரும் வரவில்லை. கடைக்குள் சம்பவம் நடந்த போது நான் கடைக்கு வெளியே இருந்தேன். கடையில் நான் மட்டுமே இருந்தேன் வேறு யாரும் இல்லை. மகேந்திரனை கத்தியால் வெட்டியதில் கழுத்தின் இடது மற்றும் வலது பக்கத்தில் காயம் இருந்தது. அதன்பின்பு கடைக்கு நான் செல்லவில்லை. அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்று விட்டேன். என் கணவரும் சம்பவத்தின்போது என்னுடன் இருந்தார். முருகேசன், பிரதீப், ரவி ஆகியோர்களை எனக்கு தெரியாது. மகேந்திரன் என்பரை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மகேந்திரன் என்பவர் இறந்துவிட்டார். அதன்பின்பு நான் திருநின்றவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார்மனு அ.த.சா.ஆ.1 ஆகும். திருநின்றவூர் போலீஸார் திரும்ப அழைத்து என்னை புழல் மத்திய சிறைக்கு அழைத்து சென்றார்கள். ஆட்களை அடையாளம் காட்டுவதற்காக அழைத்து சென்றார்கள். நான் சிறைக்கு சென்றேன். மற்ற நபர்களை எனக்கு தெரியாததால் நான் அடையாளம் காட்டமுடியவில்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...</u>**

நான் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. புகார்மனுவை போலீஸார் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல ஒருநபர் எழுதினார். எனக்கு சரியாக படிப்பறிவு இல்லை. 2018ம் வருடம்

தமிழ்செல்வனுக்கும், மகேந்திரனுக்கும் ஏற்பட்ட ஏற்கனவே உள்ள பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. 2018ல் தமிழ்செல்வனுக்கும், மகேந்திரனுக்கும் பிரச்சனை ஏற்பட்டது 4 பேர் சொல்லி எனக்கு தெரியும். அவர்கள் யார் என்று கேட்டால் என் கடைக்கு வரும் நபர்கள் சொன்னார்கள். அந்த நபர்கள் பெயர் எனக்கு தெரியாது. நான் புகார் கொடுக்க சென்றபோது என்னுடன் என் கணவர் வந்தார். சம்பவம் நடந்த தேதியோ, வருடமோ என்னால் சரியாக சொல்ல இயலாது. என் கண்பார்வை சரியாக தெரியாது என்ற விவரத்தை போலீஸாரிடம் சொன்னேனா என்று கேட்டால் அப்போது நான் சொல்லவில்லை. என் கடைக்கு தமிழ்செல்வன் அடிக்கடி வந்த வகையில் எனக்கு தெரியுமா என்று கேட்டால் அவர் என் கடைவழியாக அடிக்கடி செல்வார் அதனால் எனக்கு தெரியும். சம்பவம் நடந்த காலகட்டம் கொரோனா காலகட்டம் என்றால் சரிதான். அனைவரும் முககவசம் போட்டிருந்தார்கள். புழல் சிறையில் நான் அடையாளம் காட்டும்போது தமிழ்செல்வனை தெரியுமே ஒழிய தமிழ்செல்வன் சம்பவத்தில் ஈடுபட்டதாக சிறையல் நான் சொல்லவில்லை. சம்பவயிடத்தல் நான் தமிழ்செல்வனை பார்க்கவில்லையா என்று கேட்டால் தமிழ்செல்வன் தான் மகேந்திரனை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று நான் சொன்னேன். தமிழ்செல்வன் மகேசந்திரனை வெட்டியதை நான் நேரடியாக பார்த்தேனா என்று கேட்டால் நான் கடைக்கு வெளியே வந்துவிட்டேன். எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீஸார் 2, 3 தடவை விசாரித்தார்கள். போலீஸார் என்னிடம் வாக்குமூலம்

பதிவு செய்யவில்லை. எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் போலீஸார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் உறவினர் யாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 66/2021**

Deposition of Witness for Prosecution

Defence PW : 2

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Tr. Sundaresan |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 4th day of November, 2022.

**<u>Date : 04.11.2022, S.C.No. 66/2021 PW : 2, Tr. Sundaresan</u>**

**<u>முதல் விசாரணை...</u>**

நான் திருநின்றவூரில் குடியிருந்து வருகிறேன். செல்வராஜ் நகரில் குடியிருந்து வருகிறேன். அசா1 என் மனைவி. எஸ்.ஆர். அன்னம் ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை வைத்திருக்கிறேன். கடையில் எனக்கு உதவியாக என் மனைவி இருப்பார். ஆஜர் 1 முதல் 5 எதிரிகளில் 1ம் எதிரியை மட்டும் எனக்கு நன்றாக தெரியும். 2 முதல் 5 எதிரிகளை எனக்கு சரியாக அடையாளம் தெரியாது. 1ம் எதிரி தான் அடிக்கடி பிரச்சனை செய்வார். மகேந்திரன் என்பவரை எனக்கு நன்றாக தெரியும். நாங்கள் எங்கே வெளியே செல்லவேண்டும் என்றால் அவர் தான் வருவார். அவரை வெட்டி கொன்றுவிட்டார்கள். 1ம் எதிரி வெட்டினார். என் கடைக்குள் வைத்து வெட்டினார். வெட்டுகத்தியை வைத்து வெட்டினார். நானும் அப்போது கடையில் இருந்தேன். வெட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். மகேந்திரனுக்கு உயிர் இருந்தது. அவருக்கு கழுத்து மற்றும் உடல் முழுவதும் காயம் இருந்தது. அண்ணன் முருகேசன் சம்பவயிடத்தில் இருந்தார். மகேந்திரனின் அண்ணன் மகன் பிரதீப் மகேந்திரனை மருத்துவமனை கொண்டு செல்ல கார் எடுத்து வந்தார். ஒரு போர்வையில் மகேந்திரனை நானும், பிரதீப் எடுத்துபோட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்தோம். அவர் எப்போதோ இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். அதன்பின்னர் சம்பவத்தை பார்த்த நானும், என்மனைவியும் தான் புகார் கொடுக்கவேண்டும் என்று போலீஸார்

சொன்னார்கள். ஆகையால் நானும், என் மனைவியும் திருநின்றவூர் காவல் நிலையத்தில் தமிழ்செல்வனும் அவர் கூட்டாளிகளும் மகேந்திரனை கொன்றுவிட்டதாக புகார் கொடுத்தோம். அதன்பின்னர் 10, 15 நாட்கள் கழித்து அனைவரையும் ஜெயிலில் அடைத்திருக்கிறோம் என்றும் அடையாளம் காட்டவேண்டும் என்று சொன்னார்கள். புழல் மத்திய சிறைக்கு நானும், என் மனைவியும், முருகேசனும் சென்றோம். சிறைக்குள் நீதிபதி இருந்தார். அவர் என்னை அழைத்து அடையாளம் காட்ட சொன்னார். தமிழ்செல்வன் சிறையில் இல்லை. 2 முதல் 5 எதிரிகளை எனக்கு தெரியாததால் நான் அடையாளம் காட்டவில்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

எனக்கு 60 வயதிற்கு மேல் ஆகிறது. நான் எப்போது கண்ணாடி போடுவேனா என்று கேட்டால் 48வயதிற்கு பிறகு எனக்கு சர்க்கரை நோய் வந்ததால் படிப்பதற்காக கண்ணாடி போடுகிறேன். மருத்துவமனைக்கு காயம் பட்டவரை நாங்கள் கொண்டுவந்தவுடன் மருத்துவர் மகேந்திரனின் கண்ணை பார்த்துவிட்டு அவர் சோலிமுடிந்துவிட்டது என்று கூறினார். நான் மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்று கேட்டால் சுமார் 15 நிமிடம் இருந்தேன். அதற்கு பிறகு எனக்கு வேலையில்லாததால் நான் சென்றுவிடடேன். போலீஸார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்று கேட்டால் நான் கையெழுத்து போட்டு எழுதி கொடுத்தேன். எந்த போலீஸாரிடம் என்ன எழுதி கொடுத்தேன் என்று கேட்டால்

என் கடைக்குள் வைத்து வெட்டி சாகடித்துவிட்டார்கள் என்று எழுதி கொடுத்தேன். மகேந்திரன் எனக்கு மிகவும் பழக்கமானவர் தான். எதிரியும் திருநின்றவூரை சேர்ந்தவர் தான். என் கடையிலிருந்து 4 தெரு தள்ளி அவர் வீடு இருக்கிறது. தமிழ்செல்வனை எத்தனை வருடமாக தெரியும் என்று கேட்டால் சம்பவத்திற்கு 1 வருடத்திற்கு முன்பிருந்து எங்கள் தெருவிற்கு அருகில் இருக்கும் சலூன் கடையில் அவர் எப்போது உட்கார்ந்திருப்பார் அந்த வகையில் எனக்கு தெரியும். சம்பவம் நடந்தபோது மகேந்திரன் அண்ணனான முருகனும் சம்பவத்தின் போது என் கடைக்கு முன்னர் இருந்தார். ரவி என்பவர் யார் என்று கேட்டால் மகேந்திரன் மற்றொரு அண்ணன். சதீஷ்குமார், கார்த்திகேயன் ஆகியோர்களை தெரியுமா என்று கேட்டால் ஆளை பார்த்தால் தெரியும். இறந்தவரின் உறவினர் ஏன் புகார் கொடுக்கவில்லை என்று கேட்டால் பயத்தினால் புகார் கொடுக்கவில்லை. கண்முன்னர் ரத்தம் சொட்ட வெட்டும்போது யார் புகார் கொடுப்பார்கள். நான் சம்பவயிடத்திலேயே இல்லை என்றும் போலீஸார் சொல்லி கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் சொல்லி கொடுக்கும் அளவிற்கு நான் பச்சைபிள்ளை இல்லை. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரை நான் தான் கொடுத்தேனா என்று கேட்டால் என் மனைவி புகார் கொடுத்தார். நானும் கையெழுத்து போட்டேன். எனக்கும் 1ம் எதிரிகக்ம் இடையே முன்விரோதம் இருக்கிறது என்றும் ஆகவே அவருக்கு எதிராக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால்

எனக்கு 60 வயதாகிறது தமிழ்செல்வனுக்கு 20 வயதிருக்கும் எனக்கும் அவருக்கும் இடையே என்ன முன்விரோதம் இருக்கிறது.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.